**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 உடுமலைப்பேட்டை</u>**

**முன்னிலை :- திருமதி.T.நித்யகலா, பி.காம்.,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழட்கிழமை**

**Crl.M.P.No. 184/2026**

ரகுபதி,
த/பெ. கண்ணப்பன்,
4/187, வெள்ளே கவுண்டனூர்,
மண்ணூர், கோயம்புத்தூர்.

**....மனுதாரர்/2 ஆம் எதிரி/வாகன உரிமையாளர்**

**/எதிர்/**

<u>அரசுக்காக காவல் ஆய்வாளர்</u>
உடுமலைப்பேட்டை காவல் நிலையம்
குற்ற எண். 107/2026,
சட்டப்பிரிவு 305(e) BNS r/w 21(1) of Mines and Minerals Development and Regulation act. 1957

**...எதிர்மனுதாரர்/புகார்வாதி**

இம்மனு கடந்த 04.03.2026 ஆம் தேதி மூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, 04.03.2026 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பரிசீலணை செய்யப்பட்டு, இன்று 05.03.2026 ஆம் தேதி இம்மனு மீது இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் திரு,V.ராஜசேகரன் ஆஜராகியும் மற்றும் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும் ஆஜராகி கூறிய வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

1. இம்மனு பிரிவு 497 of BNSS பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு குறித்து அரசு உதவி வழக்கறிஞருக்கும், எதிர் மனுதாரர்

காவல் நிலையத்தாரருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

3. மனுதாரர் தரப்பில், ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் TN 99 Z 4717 TATA MOTORS LTD(TIPPER) என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி எதிரியான மனுதாரருக்கு சொந்தமானது, மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்றும், மனுதாரர் மேற்படி வாகனத்தில் ஜல்லி கற்கள் எடுத்து வந்ததாக கூறி உடுமலை போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் மேற்படி வாகனத்திற்கான Tax Invoice1 மற்றும் Trip Sheet உரிய ஆவணங்களை வைத்திருந்ததாகவும் கூறியுள்ளார்.

4. மேலும், மேற்படி வாகனம் காற்று, மழை மற்றும் சூரிய ஒலியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் சேதமடைய வாய்ப்புள்ளது என்றும், மேற்படி வாகனத்திற்குண்டான RC Book-ன் நகல் ஒப்படைத்துள்ளதாகவும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் தற்காலிகமாக ஒப்படைக்கும் பட்சம் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், வாகனத்தை எந்தவித மாற்றமும் செய்யாமலும், விற்கவோ, அடமானம் வைக்கவோ மாட்டார் என்றும், எனவே மேற்படி வாகனத்தை, மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று வாதிட்டார்.

5. அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 மற்றும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தார் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபணையில், வழக்குச் சொத்தான TN 99 Z 4717 என்ற பதிவெண் கொண்ட அசோக் லே லேண்ட் என்ற எதிரிக்கு சொந்தமான வாகனம் உடுமலை காவல் நிலைய குற்ற எண்.107/2026 சட்டப்பிரிவு 305(e) BNS r/w 21(1) of Mines and Minerals Development and Regulation act 1957-ல் கைப்பற்றப்பட்டதாகவும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயலுக்கு ஈடுபடுத்தக்கூடும் என்றும், வாகனத்தினை உருமாற்றம் செய்து விற்கவும், நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தாமல் இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றும், எனவே மேற்படி

வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க எதிர்மனுதாரர்/அரசு தரப்பில் கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

6. **தற்போது தீர்வுக்குரிய விவரம் யாதெனில் மனுதாரர் கோரியுள்ள வழக்கு சொத்தினை மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

(06.01) வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்குச் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள TN 99 Z 4717 என்ற பதிவெண் உடைய அசோக் லே லேண்ட் வாகனம் உடுமலை காவல் நிலைய குற்ற எண்.107/2026 சட்டப்பிரிவு 305(e) BNS r/w 21(1) of Mines and Minerals Development and Regulation act. 1957–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைப்பற்றப்பட்டு காவல் நிலைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(06.02) மேலும், அரசு அனுமதியின்றி, உரிய அனுமதி எதுவும் பெறாமல் சாதாரண கற்களை எடுத்து வந்துள்ளது தெரிய வந்துள்ளதாலும், மேற்படி வாகனத்தை திருப்பி கொடுத்தால் மேற்படி வாகனத்தை அரசுடமையாக்க நடவடிக்கை எடுப்பதில் சிரமம் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டும் மற்றும் மேற்படி வாகனத்தை திருப்பி கொடுத்தால் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்காமல், விசாரணைக்கு தடை ஏற்பட்டு, வாகனத்தை விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் விற்பனை செய்வதற்கு வாய்ப்புள்ளது என்ற அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 05 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.05 21:32:12 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.